**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**OS. 28/2024**

நாள்.11.02.2026

**பி.வா.சா.1 வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

நான் 3 லட்சம் ரூபாய் கடன் வாங்கியதாக தான் வாதி என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.வாதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நகல் எடுத்து பார்த்தேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் என்றால் சரிதான். நான் வெற்று பத்திரத்தில் கையெழுத்து போட்டதாகதான் கட்சி ஆடுகிறேன். வா.சா.ஆ.1 ஆவணத்தில் துரைமுருகன் மற்றும் சிதம்பரம் என்று தான் இருக்கிறது என்றால் சரிதான். நான் மளிகை கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். 20 ஆண்டுகளாக மளிகை கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். பணம் கொடுக்கல் வாங்கல் ஆவணங்கள் எழுதி கொடுக்கப்படும் விவரம் எனக்கு தெரியும். சந்திரா என்னிடம் பணம் பெற்றதற்கான எழுத்து பூர்வமான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சந்திராவிடம் பணம் கொடுத்தற்கு ஆவணங்கள் ஏதேனும் எழுதி வாங்கி கொண்டேனா என்றால் இல்லை. துரைமுருகன் தான் எழுதி கொடுத்தார். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் துரைமுருகன் என்பவரின் கையெழுத்து உள்ளதா என்றால் உள்ளது. எனது வீட்டின் கதவு எண் தெரியுமா என்றால் சரியாக

நியாபகமில்லை. பி.வா.சா.ஆ.1 ஆவணம் என்னால் தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் துரைமுருகன் என்ற பெயர் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் அடித்தல் திருத்தம் உள்ளது என்று சொன்னால் உள்ளது. பி.வ.சா.ஆ.1 ஆவணத்தில் 04.02.2020 என்ற தேதியில் அடித்தல் திருத்தம் உள்ளது என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் எத்தனை பக்கங்கள் திருத்தங்கள் உள்ளது என குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் தேதி 2 முறை எழுதப்பட்டுள்ளது என்றால் எழுதப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் எனது மனைவி ஆதார் அட்டை நகல் உள்ளது என்றால் சரிதான். எனது மனைவியின் ஆதார் அட்டை நகலை சந்திராவிடம் கொடுத்ததாக எதிர்வழக்குரையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். 30.07.2019–ல் நான் சந்திராவிடம் ரூபாய் 1 லட்சம் கொடுத்தற்கான ஆவணத்தை நீதிமனற்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சந்திரா என்பவரிடம் ரூ 1 லட்சம் வாங்கியதாகதான் கட்சி ஆடுகிறேன் என்றால் சரிதான். 4 மாதங்களுக்குள் 1 லட்சம் கொடுத்தாக தான் கட்சி ஆடுகிறேன் என்றால் சரிதான். வாதியிடம் இருந்து எனக்கு கடந்த 03.03.2024–ம் தேதி எனக்கும் எனது மனைவிக்கு வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு வந்தது என்றால் சரிதான். .வா.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ள கையெழுத்து

என்னுடையது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள விவரங்களை நான் படித்து பார்த்தேன் அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள விவரங்களை படித்த பிறகு துரைமுருகன் என்பவருக்கு மறுப்பு அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 ஆவணத்திற்கு நான் பதில் கொடுக்காதற்கு காரணம் அதில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் உண்மை என்று தெரிந்த காரணத்தினால் தான் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்திற்கு பின்னிட்டு நான் துரைமுருகன் மீது காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பின்னிட்டு நான் துரைமுருகன் மீது காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. நான் வா.சா.ஆ.2 அறிவிப்பிற்கு பின்னர் துரைமுருகன் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுக்கதற்கு காரணம் வா.சா.ஆ.1–ன்படி கடன் வாங்கியது உண்மையென்பதால் தான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 காவல் நிலையத்தில் கொடுத்த புகாரானது வா.சா.ஆ.1–ல் கண்ட தொகையை ஏமாற்ற வேண்டுமென்பதற்காக பொய்யாக கொடுத்த புகார் என்றால் சரியல்ல. நான் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் புகார் மனு நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் பேரில்

முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யபடவில்லை. வெளியில் பேசி தீர்த்துக்கொள்ளாம் என்று சொன்னார்கள். அதனால் தான் மனு முடிக்கப்பட்டுவிட்டது. பி.வா.சா.2 ஆவணத்தின் அடிப்படையில் துரைமுருகனை காவல்நிலையத்தில் அழைத்து விசாரிக்கவில்லை. காவல் நிலையத்தில் வாதியை அழைத்து விசாரித்தாக சொல்கிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் நிரப்பபடாமல் கையெழுத்து மட்டும் தான் போட்டுக்கொடுத்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்திற்கு சரியான பிரதி போஜனம் கிடையாது என்றோ மறுபயன் கிடையாது என்றோ குறிப்பாக என்னுடைய எதிர்வழக்குரையில் குறிப்பிட்டு மறுக்கவில்லை என்று சொன்னால் சரிதான்.வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் வாதியிடம் நான் ரூபாய் 3 இலட்சம் கடனாக ரொக்கமாக 10.12.2022 அன்று என் வீட்டில் வைத்து பெற்று கொண்டேன் என்றால் சரியல்ல. நீதிமனற்தில் வழக்கு தாக்கல் செய்த பின்னர் துரைமுருகன் மீது காவல் நிலையத்தில் ஏதேனும் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணம் காலாவதியானது என எதிர்வழக்குரையில் சொல்லி உள்ளது தவறு என்றால் நான் அவ்வாறு சொல்லவில்லை. 1 இலட்சம் பணம் கடன் வாங்கியதற்காக தான் வா.சா.ஆ.1 ஆவணம் எழுதி கொடுக்கப்பட்டுள்ளது. அசல் வழக்கு காலாவதியால் பாதிக்கப்பட்டுள்ளது என எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால்

சரிதான். நான் வா.சா.ஆ.1 ஆவணத்திற்கு பணத்தை திருப்பி செலுத்தியது சம்பந்தமாக நிருப்பிக்கவேண்டிய சட்டப்படியான தார்மீக பொறுப்பு எனக்கு தான் உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் உரிய காலத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்கிற்கான வழக்கு மூலம் உள்ளது என்றும், அசல் வழக்கு காலாவதி தோசத்தால் பாதிப்பு அடையவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே உள்ள பணபரிவர்த்தனை கொண்டு இந்த வழக்கில் கட்சி செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி அசல் மற்றும் வட்டி தொகையுடன் செலுத்த நான் கடைமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. எனது எதிர்வழக்குரையில் அசல் வழக்கு சட்டப்படி முரன்தடைப்பட்டுள்ளது என்று சொல்லியுள்ளது தவறு என்று சொன்னால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:– இல்லை</u>**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.